# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திச் செயற்திட்டம் - (எஸ்ஈயூடீபீ) கட்டம் 1-ஏ -2012

## 1. அபிப்பிராயம்

---------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்குகிணங்கவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள், அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஸ்) அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கிநடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

------------------------

### 2.1 நிதிசார் செயலாற்றல்

---------------------------------

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவு ரூபா 84,995,519 ஆக இருந்ததுடன் 2012

திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 951,027,574 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவுகள், முன்னைய ஆண்டிற்கான செலவுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் என்பவற்றின் பொழிப்பு பல்வேறு வகுதிகளின் கீழ் பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| **செலவு வகுதி** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு** |
|---|---|---|---|
| | **2012** | **2011** | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| விடுதி கட்டிடத் தொகுதி | 10,466,468 | 17,737,183 | 315,300,478 |
| பதவியினர் விடுதிகள் | 2,843,292 | 1,626,000 | 148,871,451 |
| மாணவர் நிலையம் | 16,430,119 | 10,925,654 | 53,442,166 |
| இஸ்லாமியக் கற்கைகள் பீடம் | 16,452,199 | 65,755,028 | 138,886,135 |
| மைதானம் மற்றும் அரங்கு | 4,064,642 | 18,984,091 | 48,005,659 |
| தொழில்நுட்ப பீடம் | 7,901,411 | 50,493,075 | 106,598,064 |
| சுகாதார நிலையம் | 989,767 | 9,396,073 | 22,257,694 |

| | | | |
|---|---|---|---|
| பதவியினர் விடுதிகளுக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 7,868,318 | 2,037,899 | 12,220,143 |
| ஆலோசனைக் கட்டணம் | | | |
| - உள்ளூர் | 2,094,968 | 5,240,497 | 44,825,403 |
| - வெளிநாடு | 2,451,237 | 1,623,041 | 18,368,499 |
| விடுதி மாணவர்களுக்கான நீர் வழங்கள் முறைமை | 5,770,144 | | 5,770,144 |
| நிலையான சொத்துக்கள் | 68,096, | 210,504 | 292,460 |
| அலுவலக உபகரணம் | 390 | - | 2,196,812 |
| நானாவித செலவுகள் | 7,594,468 | 7,690,798 | 33,992,466 |
| | -------------- | ----------------- | --------------- |
| மொத்தம் | 84,995,519 | 191,719,843 | 951,027,574 |
| | ========= | ======== | ======== |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 யூலை 17 ஆந் திகதியிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக செயற்திட்டத்தின் திரண்ட செலவு ரூபா 951,027,574 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 10,821,354 தொகையான செலவுகளை மீள்நிரப்புவதற்காக வேண்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், உரிய மீள்நிரப்பல்கள் குவைத் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உயர்

கல்வி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரைகளின் பிரகாரம் இத்தொகையினை உள்ளூர் நிதியக் கணக்கிற்கு மாற்றுவதற்கு திறைசேரியினால் உடன்பாடு காணப்பட்டது.

(ஆ) தேசிய கேள்வி முறைமையின் பிரகாரம் இரண்டு ஒப்பந்தங்களின் கீழ் பதவியினர் வதிவிடங்களுக்காக வீட்டு பாவனைப்பொருட்களை கொள்வனவு செய்து பொருத்துவதற்காக 05 நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றில் விநியோகத்தர் ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்வி எக்காரணமும் வழங்கப்படாது நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டாவது ஆகக்குறைந்த கேள்வியைச் சமர்ப்பித்த விநியோகத்தரிடமிருந்து குறைந்த விலையின் கீழ் வீட்டு பாவனைப் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இந்த இரண்டு நிறுவனங்களும் ஒரே இடத்தில் செயற்பட்டிருந்த போதிலும் ஆகக்குறைந்த கேள்வியினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தின் போக்குவரத்துச் செலவினை ரூபா 70,000 ஆல் மிகைத்து போக்குவரத்துச் செலவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) நான்காவது கூறாகிய கல்வி அபிவிருத்தித் தட்டமானது செயற்திட்ட உடன்படிக்கையின் பின்னிணைப்பு 02 இன் பிரகாரம் செயற்திட்ட கால இறுதி வரையும் அமுல்படுத்தப்படடிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் தொடர்பான அனைத்து செயல்முன்னேற்ற அறிக்கைகளும் மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்காய்விற்குப் டிபற்றுக்கொள்ளமுடியாதிருந்தது. ஆதன் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பாக கணக்காய்வில் திரப்திகொள்ள முடியாதிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 நிதிசார் செயலாற்றல்

---

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக செலவுத் தலைப்பு 171 - உயர்கல்வி அமைச்சு என்பதன் கீழ் ரூபா 106,500,000 தொகை செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிதி ஏற்பாடு, அது தொடர்பாக இடம்பெற்ற உள்ளபடியான செலவு, நிதிகளின் குறைந்த பயன்பாடு என்பவற்றின் விபரம் கீழே தரப்படுகின்றன.

| செலவுத் தலைப்பின் விபரம் | 2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செலவு | குறைந்த பயன்பாடு | |
|---|---|---|---|---|
| | | | தொகை | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வெளிநாட்டு உதவி – கடன் | 2,500,000 | 2,451,237 | 48,763 | 2 |
| மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி – கடன் | 60,000,000 | 59,384,749 | 615,251 | 1 |
| வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதிகள் | 44,000,000 | 23,159,533 | 20,840,467 | 47 |
| | 106,500,000 | 84,995.519 | 21,504,481 | 20 |

## 4.2 செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தங்களின் பௌதீகச் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டன.

| | செயற்திட்ட நடவடிக்கைகள் | ஒப்பந்தப் பெறுமதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | உள்ளபடியான பூர்த்திசெய்தல் திகதி | பூர்த்திசெய்தலில் தாமதம் (மாதங்கள்) | 2012-08-30 வரையும் செலுத்திய தொகை | நிதிசார் செயலாற்றல் | பௌதீகச் செயலாற்றல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | ரூபா | % | % |
| 1. | விடுதி கட்டிடத் தொகுதி | 287,096,828 | 2010-07-15 | 2010-11-05 | 03 | 315.300,478 | 109.82 | 100 |
| 2. | பதவியினர் விடுதிகள் | 131,309,050 | 2010-04-15 | 2010-04-15 | | 148,871,451 | 113.37 | 100 |
| 3. | மாணவர் நிலையம் | 54,865,015 | 2011-06-07 | 2012-03-10 | 09 | 53,442,166 | .97 | 100 |
| 4. | இஸ்லாமியக் கற்கைகள் பீடம் | 111,433,936 | 2011-05-08 | .2011-12-20 | 07 | 138,886,135 | 124.64 | 100 |
| 5. | மைதானம் மற்றும் அரங்குகள் | 38,992,117 | 2011-06-29 | .2011-12-20 | 06 | 48,005,660 | 123.12 | 100 |
| 6. | தொழில்நுட்ப பீடம் | 117,046,400 | 2011-05-12 | .2011-08-31 | 03 | 106,598,064 | 91 | 100 |
| 7. | சுகாதார நிலையம் | 21,267,927 | 2010-10-31 | 2011-03-15 | 04 | 22,257,694 | 104.65 | 100 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | மாணவர் விடுதிகளுக்கான நீர் வழங்கள் முறைமை | 5,770,144 | | 2012.08.27 | - | 5,770,144 | 100 | 100 |
| 9. | பதவியினர் விடுதிகளுக்கான தளபாடம் | 11,501,917 | | | - | 11,501,917 | 100 | 100 |
| 10. | பதவியினர் விடுதிகளுக்கான உபகரணங்கள் | 718,227 | - | - | - | 718,227 | 100 | 100 |
| | மொத்தம் | 780,001,561 | | | | 851,351,936 | | |
| | | ========= | | | | ========= | | |

மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா 780,001,561 ஆக இருந்த போதிலும் இடம்பெற்ற உள்ளபடியான செலவு ரூபா 851,351,936 ஆக இருந்தது. ஆகவே செலவு ரூபா 71,350,375 ஆல் மிகைத்திருந்தது.